DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.387/15

Deposition of Witness: PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | காமராஜ் | Father's Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.12.2020

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அரண்மனைப்புதூரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்துவருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எனக்கு உறவினர்கள். நான் 2ம் எதிரி வேலுத்தாய்க்கு பணம் ரூ 90000ம் பணம் கடனாக கொடுத்திருந்தேன். அவர்கள் சொன்னதை போல் திருப்பி தரவில்லை. பிசிபட்டி காவல்நிலையத்தில் புகார் செய்தவுடன் எதிரிகள் இருவரையும் அழைத்து விசாரணை செய்தார்கள் அவர்கள் பணம் திருப்பிக்கொடுக்க நேரம் கேட்டார்கள். சொன்னவாறு அவர்கள் பணத்தை கொடுக்கவில்லை. காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்து 3மாதம் கழித்தும் பணம் கொடுக்கவில்லை. மறுநாள் 9.6.15ம் தேதி காலை பஞ்சாயத்து அலுவலகம் உள்ள பகுதியில் நடைபயிற்சி செய்துக்கொண்டிருந்தேன் அப்போது அங்கு வந்த 1ம் எதிரி என் பின்னால் வந்து சட்டையை பிடித்து இழுத்து அவர் வைத்திருந்த இரும்பு பைப்பால் ஏண்டா தாயோழி என்று சத்தம் போட்டு காவல்நிலையத்தல் ஏன் புகார் கொடுத்தாய் என்று கூறி என்னை போலிஸ்டேசன் வரைக்கும் என்னை கூட்டி சென்றாய் என்று கூறி பைப்பால் அடிக்க வந்தார். சொல்லமுடியாத வரர்த்தைகளால் அசிங்கமாக பேசினார். நான் கிழே விழுந்து அவரிடமிருந்து தப்பித்து ஓடிவிட்டேன். அதன் பிறகும் வீதியில் நின்று சொல்லமுடியாத வார்த்தைகளால் பேசினார். நான் உயிருக்கு பயந்து பிசிபட்டி காவல்நிலையத்தில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எனக்கும் எதிரக்கும்இடையே கொடுக்கல் வாங்கல் சம்மந்தாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் எந்த இடத்தில் , எத்தனை மணிக்கு நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை யார் பார்த்தார் யார் தடுத்தார்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 9.6.15ம் தேதி பஞ்சாயத்து அலுவலகம் முன்பு சம்பவம் நடைபெற்றதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 22.8.15ம் தேதி நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்து வந்ததால் தான் நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.